©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 362] CHENNAI, TUESDAY, JUNE 28, 2022
Aani 14, Subakiruthu, Thiruvalluvar Aandu–2053

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் கிராம ஊராட்சிகளின் ஆய்வாளர்.**

**திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை**

(*ந.க. எண். 6109/2021/அ4*)

**No. VI(2)/66(b)/2022.**

திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ம. செல்வராணி என்பவர் மீது 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 205(1)(a)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி, திண்டுக்கல் ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவிப்பு ந.க. எண். 6109/2021/அ4, நாள் 11.04.2022 ன்படி விளக்கம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டது. 23.04.2022ம் தேதிய கடிதத்தின் மூலமாக புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ம. செல்வராணி என்பவர் மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு தனது எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை அளித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ம. செல்வராணி என்பவர் மீது 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 205(1)(a)-ன் படி பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த விளக்கம் திருப்திகரமாகவும், ஏற்புடையதாகவும் இல்லை என்பதால் 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 205(3)ன்படி புஷ்பத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பழனி வட்டாட்சியர் தலைமையில் ஊராட்சி மன்றக் கூட்டத்தை கூட்டி புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்வது பற்றி உறுப்பினர்களின் கருத்துக்களை கூட்ட நடவடிக்கை புத்தகத்தில் பதிவு செய்து நடவடிக்கை முடிவை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் அனுப்பி வைக்குமாறு திண்டுக்கல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவரின் நடவடிக்கைகள் ந.க. எண். 6109/2021/அ4, நாள் 05.05.2022ல் பழனி வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டது.

புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்வது குறித்து ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை பெறுவதற்கான கூட்டம் பழனி வட்டாட்சியர் தலைமையில் 23.05.2022 முற்பகல் 11.00 மணிக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும் என பழனி வட்டாட்சியரின் கடிதம் ந.க. எண். 3978/2022/அ1, நாள்: 13.05.2022 ன் மூலமாக புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் புஷ்பத்தூர் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிப்பு செய்யப்பட்டது.

பழனி வட்டாட்சியரின் கடிதம் ந.க. எண். 3978/2022/அ1, நாள் 13.05.2022 ஐ எதிர்த்து புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.ம.செல்வராணி என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்: W.P. (MD) No. 10157 of 2022 and W.M.P.No. 7211 of 2022 ல் 20.05.2022 அன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கீழ்க்காணும் விபரப்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

> "Since the procedure contemplated under Section 205 (2) of Tamil Nadu Panchayat Act, 1994, has not been followed, the impugned notice issued by the tahsildar has be necessarily quashed. Accordingly, this Writ Petition is allowed and the impugned notice issued by the second respondent is hereby quashed. However, liberty is granted to the respondents, if so adviced, to proceed against the petitioner by following the procedure contemplated under Section 205(2) of Tamil Nadu Panchayat Act, 1994 from the stage of Section 205 (3) of the Act. There shall be no order as to costs. Consequently, connected Miscellaneous petition is closed"

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் **திருமதி ம. செல்வராணி** என்பவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், குற்றச்சாட்டுகளின் மீதான தனியரின் எழுத்துப்பூர்வமான விளக்கங்கள் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)ன் குறிப்புரைகள் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டதில், ஒப்பந்தக்காரர் நியமனத்தில் தொழில்நுட்ப அனுமதி பெறாமல் ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், டெண்டர் விதிமுறைகளின்படி டெண்டர் நோட்டீஸ் தேதி, நாள் குறிப்பிடப்படாமல் வேண்டப்பட்ட நபருக்கு மட்டுமே டெண்டர் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெறப்பட்ட Income Tax மற்றும் Labour Welfare Fund உரிய தலைப்பில் செலுத்தப்படாதமைக்கான காரணம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றும் தனியரின் விளக்கம் ஏற்புடையதாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு, தனியர் அளித்த விளக்கங்கள் ஏற்புடையதாக இல்லை என்பதால் தனியர் அளித்த விளக்கங்கள் நிராகரிக்கப்படுவதாக திண்டுக்கல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவரின் ந.க.எண்: 6109/2021/அ4 நாள்: 30.05.2022ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வுத்தரவு 03.06.2022 அன்று புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவருக்கு சார்வு செய்யப்பட்டுள்ளது.

எனவே, 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 205(3)ன்படி புஷ்பத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பழனி வட்டாட்சியர் தலைமையில் ஊராட்சி மன்றக் கூட்டத்தை கூட்டி புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்வது பற்றி உறுப்பினர்களின் கருத்துக்களை கூட்ட நடவடிக்கை புத்தகத்தில் பதிவு செய்து நடவடிக்கை முடிவை சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன் அனுப்பி வைக்குமாறு ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவரின் நடவடிக்கைகள் ந.க. எண் 6109/2021/அ4, நாள் 10.06.2022 இல் பழனி வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டது.

புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்வது குறித்து ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை பெறுவதற்கான கூட்டம் பழனி வட்டாட்சியர் தலைமையில் 23.06.2022 முற்பகல் 11.00 மணிக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும் என பழனி வட்டாட்சியரின் கடிதம் ந.க. எண். 3978/2022/அ1, நாள்: 10.06.2022 ன் மூலமாக புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் புஷ்பத்தூர் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிப்பு செய்யப்பட்டது. கூட்ட அறிவிப்பு கடிதம் புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் அனைத்து வார்டு உறுப்பினர்களுக்கும் சார்பு செய்யப்பட்டது.

திண்டுக்கல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவரின் ந.க.எண்: 6109/2021/அ4, நாள்: 30.05.2022 மற்றும் பழனி வட்டாட்சியரின் கடிதம் ந.க.எண். 3978/2022/அ1, நாள் 13.05.2022 ஆகியவற்றை தள்ளுபடி செய்ய வேண்டி புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ம. செல்வராணி என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண். W.P. (MD) No. 12675 of 2022 , 22.06.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

புஷ்பத்தூர் ஊராட்சியின் அனுமதிக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

புஷ்பத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பழனி வட்டாட்சியர் தலைமையில் 23.06.2022 முற்பகல் 11.00 மணிக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்வது குறித்து ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை பெறுவதற்காக நடைபெற்ற கூட்டத்தில் புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் 12 வார்டு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மீது 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 205(1)(a)-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் குற்றச்சாட்டுகளுக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அளித்துள்ள விளக்கம் ஆகியவை பழனி வட்டாட்சியரால் வாசித்து காண்பிக்கப்பட்டது. புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கைக்கு 7 வார்டு உறுப்பினர்கள் ஏற்பளித்துள்ளதாகவும், புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கையை ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் 5 வார்டு உறுப்பினர்கள் நிராகரித்துள்ளார்கள் எனவும், அவர்களது கருத்துரைகள் கூட்ட நடவடிக்கை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு கையொப்பம் பெறப்பட்டுள்ளது என பழனி வட்டாட்சியரின் கடிதம் ந.க. எண் 3978/2022/அ1, நாள் 23.06.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்ட வருகை பதிவேட்டில் சான்றொப்பமிடப்பட்ட நகல் மற்றும் கூட்ட நடவடிக்கை பதிவேட்டின் சான்றொப்பமிடப்பட்ட நகல் ஆகியவை பழனி வட்டாட்சியரின் கடிதத்துடன் பெறப்பட்டுள்ளது.

பழனி வட்டாட்சியரின் அறிக்கை மற்றும் கூட்ட நடவடிக்கை குறிப்பின் அடிப்படையில் புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டம் சட்டப்பிரிவு 205 ன்கீழ் பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கைக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு அளித்துள்ளார்கள் என்பது உறுதியாகிறது.

புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மீது 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 205 (1) (a) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், குற்றச்சாட்டுகளுக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அளித்துள்ள விளக்கம், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இப்பொருள் தொடர்பாக தொடரப்பட்ட வழக்குகளில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரைகள், புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத்தின் கருத்துரைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவை என்னால் சுயமாக கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. குற்றச்சாட்டு எண்: 1, 2 மற்றும் 3 ன்படி ஊராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தகாரராக பதிவு செய்யப்படாத நபருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பணிகளுக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்படாமலும், ஊராட்சியில் பராமரிக்க வேண்டிய டெண்டர் பதிவேடு பராமரிக்கப்படாமலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனால் அரசாணை (நிலை) எண்: 203 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்: 20.12.2007ல் வெளியிடப்பட்ட Tamil Nadu Panchayats (Preparation of Plans and Estimates for works and mode and conditions of contracts) Rules, 2007 ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றாமல் (Disobeying the provision of the Rules) புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் செயல்பட்டுள்ளார் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. பல்வேறு செலவினப் பட்டியல்களில் துணைத் செலவுச்சீட்டுகள் இன்றி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு எண்: 6-ன்படி 2017ம் ஆண்டு தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தை முறையாக பின்பற்றாமல் ஒப்பந்தகாரர்களிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட அளவில் பிடித்தம் செய்யப்படாமல், குறைவாக பெறப்பட்ட GST மற்றும் Labour Welfare Fund தொகை உரிய தலைப்பில் செலுத்தப்படாத காரணத்தால் (Wilfully omits and refuses the provision of TamilNadu GST Act, 2017) அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு எண். 8 மற்றும் 9ன்படி, அரசாணை (நிலை) எண். 76 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 05.07.2017 க்கு புறம்பாக புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தி (Abusing of power vested in President) 3 நபர்களை மேல்நிலை

நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களாக பணிநியமனம் செய்து, அவர்களுக்கு ஊராட்சி கணக்கு எண். 7-ல் இருந்து ஊதியம் வழங்கியுள்ளார். இதன் மூலம் ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.இதன் மூலம் ஊராட்சி மன்றத் தலைவர் தனது கடமையை செய்ய தவறியுள்ளார் என்பது உறுதியாகிறது. இனி மேலும் இவர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியில் தொடர்ந்தால் இவரது தவறான நடவடிக்கைகளால் ஊராட்சி நிர்வாகத்திற்கு சீர்கேடு ஏற்படுவதுடன், ஊராட்சிக்கு தொடர்ந்து நிதியிழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. குற்றச்சாட்டுகளுக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அளித்துள்ள விளக்கங்கள் திருப்திகரமாகவும், ஏற்புடையதாகவும் இல்லை. மேலும், புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கைக்கு ஆதரவளித்து பெரும்பான்மையான வார்டு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். இவ்வலுவலகம் மூலம் பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அளித்துள்ள விளக்கம் நிராகரிக்கப்படுகிறது.

எனவே, 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 205 (11) ன்படி திருமதி ம. செல்வராணி என்பவரை புஷ்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியில் இருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை செய்யப்படுகிறது. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்குவரும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

**முனைவர். ச. விசாகன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

திண்டுக்கல்,
2022, ஜூன் 28.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU